***அனுப்புனர்:***

*N நெல்லை கோபால்*
*மூத்த பத்திரிகையாளர்.*
*771/1-சாம்பவர், முனுசாமிசாலை*
*KK நகர், சென்னை 78*
*9994478389. / 22.06.2022.*



**மகேந்திரன்**



**SBHC செந்தில்குமார்**

***பெறுனர்:***

*மதிப்பிற்குரிய மாண்புமிகுக்கள், திருமிகு அரசு செயலர்கள் அவர்கள், திருமிகு.மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மற்றும் திருமிகு. மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருமிகு, SP -ன் தனிப்பிரிவு ஆய்வாளர் அவர்கள், திருமிகு. மதுக்கூர் காவல் ஆய்வாளர் அவர்கள் மற்றும் திருமிகு. பட்டுக்கோட்டை துணைக்காவல்கண்காணிப்பாளர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.*

***பொருள் :***

***டெல்டா பகுதியில் (வாட்டாகுடி வடக்கில்) கஞ்சா சாறு, மற்றும் மருத்துவ போதைவஸ்துகளை கலந்து, கலப்படமது விற்பனைகள்-கலப்பட சரக்கினை உரிய ஆய்வு (Lab-test) செய்து, டெல்டா பகுதி வாழ் மக்களின் உயிர் காக்கவும், மற்றும், சிறைபிடிக்கப்பட்ட கலப்படமது விற்பனையாளரான மகேந்திரன் மீது சின்னதாக கள்ள லாட்டரி வழக்கை மட்டும் பதிவு செய்யப்பட்டுவிட்டு, கலப்பட மது விற்பனையை கணக்கில் காட்டாமல், மகேந்திரனுக்கு விசுவாசம் காட்டிய, மதுக்கூர் காவல் SBHC செந்தில்குமார் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு, மகேந்திரன் மீது கலப்பட மது விற்பனை வழக்கை பதிவு செய்வதும் தொடர்பாக....***

*தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் ஒன்றியம்,வாட்டாகுடி வடக்கு கிராமத்தை சேர்ந்த தீபாவளி தேவர் என்கிற பிரபலனாதனின் மகனான மகேந்திரன் என்பவர், அரசால் தடை செய்யப்பட்ட, கள்ள லாட்டரிகளையும், கலப்பட மதுபாட்டில்களையும் விற்று வருகிறார் என கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நமது "அரசியல் ஒற்றன்" என்ற பத்திரிகையில் தொடர்ந்து செய்தியாக வெளியிட்டு வந்தோம்.*

*அதனையே புகாராகவும், நமது மூத்த பத்திரிகையாளரால் அவரது சென்னை முகவரியிட்டு தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் சென்னையில் உள்ள உயர் அதிகாரிகளுக்கும், தஞ்சாவூர் மாவட்ட சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கும். ஆட்சியருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. அதே நேரத்தில் அந்த புகார்கள் மீது எல்லாம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் அவைகள் அனைத்தும் முடக்கவும்பட்டிருந்தது*

*ஏனெனில், மகேந்திரனிடம் இருந்து கள்ளலாட்டரி, மற்றும் கலப்படமது விற்பனைக்கு ஒரு பெரும்தொகைகள் காவல்துறையினருக்கு லஞ்சமாக போய்கொண்டிருந்ததால் "மதுக்கூர்" போலிசாராலும், மற்றும் பட்டுக்கோட்டை "கலால் " போலிசாராலும் நடவடிக்கை எடுக்க மறுத்து வந்ததையும் நம்மால் புகாராக தெரிவித்து உரிய நடவடிக்கைக்கும் கோரி வந்தோம்.*

*மேலும் இந்த ஊழல்களை அறிந்த நாம், மீண்டும் அடுத்தடுத்து வெளிவந்த நமது அரசியல் ஒற்றன் இதழில் 'மகேந்திரனின் மாமூல் செய்திகள் குறித்தும் அவனது சமூக விரோத தொழில்கள் பற்றியும், இதற்கு காரணமான மதுக்கூர் காவல் SBHC செந்தில்குமார் பற்றியும் உரிய செய்திகளை பதிவு செய்தும், மற்றொரு கட்டுரையினையும் அச்சு செய்து, உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றதோடு அதனையும் புகாராக தெரிவித்துவந்தோம்*

*இப்படி, நமது இதழ்களில் செய்திகள் வெளிவந்தபோதிலும், தனிப்பட்ட புகாராகவும் நமது மூத்த பத்திரிகையாளரால், அனைத்து காவல் அதிகாரிகளின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டு கொண்டே இருந்தது.*

*இப்படி புகார்களும், பத்திரிகையில் செய்திகளும் தொடர்ந்து நாம் வெளியிட்டதால், நமது மூத்த பத்திரிகையாளரை பற்றியும், மற்றும் அவரது மனைவியை பற்றியும் அருவருக்கதக்க செய்திகளை கூறிய மகேந்திரன் "போலீஸே" அவரது கைக்குள் அடக்கம் என்கிற ரீதியில் அவரது கைப்பேசியில் இருந்து கொலை மிரட்டலையும் தொடர்ந்து வந்தார் மகேந்திரன். (அனைத்துக்கும் ஆதாரம் மகேந்திரன் பேசிய கைப்பேசியின் ரிக்கார்டு)*

*மேலும்,அவரது நடவடிக்கைகள் அனைத்தையும் மதுக்கூர் காவல் ஆய்வாளர் அவர்களுக்கும் அவ்வப்போது உடனுக்குடன் தபால் மூலம் PROOF of DELIVERY கார்டுடன், ஆய்வாளரின் கவனத்திற்கும் கொண்டு சென்றும், மதுக்கூர் காவல் ஆய்வாளரால் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் கடந்த இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்பு காவல் ஆய்வாளரிடம் பேசியபோதும், அப்படியா என ஆச்சர்யபட்டு கேட்கிறமாதிரி கேட்டுவிட்டு, உங்க புகார் பற்றி விசாரிக்கிறேன் என கூறினார். சில நாட்கள் கழித்து மீண்டும் மதுக்கூர் காவல் ஆய்வாளரிடம் கேட்ட போது, இதுவரை உங்களால் அனுப்பப்பட்ட புகார்கள் எதுவுமே, எனது கவனத்திற்கு வரவே இல்லை என்பதை கூறிய மதுக்கூர் காவல் ஆய்வாளர், மீண்டும் நடவடிக்கை எடுக்கிறேன் என கூறினார். ஆனாலும்,உரிய நடவடிக்கை அவராலும் எடுக்கப்படாமல் அப்படியே தொடர்ந்தது .*

*இது பற்றிய விசாரணையில் நாம் இறங்கியபோதுதான், இவை அனைத்திற்கும் மதுக்கூர் SBHC செந்தில்குமாரின் வேலைதான் காரணம் என்பதையும், மதுக்கூர் காவலர்கள் மூலம் நாம் அறிந்ததோடு, இப்படி SBHC செந்தில்குமாரின் ஒழுக்ககேடான பணியில் SP - தனிப்பிரிவின் காவல் ஆய்வளரான மணிவேல், அவர்களது பங்கும் இருப்பதாக செந்தில்குமார் தரப்பில் இருந்தே நமது கவனத்திற்கு தகவல் வந்தது.*

*அதே நேரத்தில் நமது மூத்த பத்திரிகையாளரால் அனுப்பி வைக்கப்பட்ட புகார்கள் எல்லாம் SP ஆய்வாளரான மணிவேல் கவனத்திற்கு சென்றிருப்பதையும், நாம் அவருடன் தொலைபேசியில் உரையாடிய போது அவரும் ஒப்புதலை தெரிவித்தார். அப்படியிருக்கையில் கடந்த மூன்று மாதமாக ஆய்வாளர் மணிவேல் அவர்களால் ஏன் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை பார்க்கின்றபோது, செந்தில்குமார் தரப்பில் இருந்து வெளிவரும் செய்திகளில் எல்லாம் உண்மையாக இருக்குமோ என்ற சந்தேகங்களும் எழுகிறது. ஆனாலும், நேற்று காலை எஸ்.பி-யிடம் நாம் தகவலை கூறிய பின் அனைத்தையும் எஸ்.பி-ins மணிவேல் அவர்கள், மின்னல் வேகத்தில் முடித்தார். மேலும் எஸ்.பி ஆய்வாளரின் பணிகளும், அவரது சுறுசுறுப்புகளும், நம்மை தொடர்பு கொண்ட விதங்களும் அவரது பணியின் அதிரடிகளை பிரதிபலித்துகாட்டியது.*

அதே நேரத்தில், தஞ்சை மாவட்ட முழுக்க சமூக விரோத தொழில்களில் வரும் லஞ்சம் என்ற மாமூல்கள் எல்லாம் எஸ்.பி - யின் தனிப்பிரிவு ஆய்வாளரான மணிவேல் - க்கு செல்வதாக கூறப்படும் மதுக்கூர் காவல் SBHC-செந்தில்குமாரின் செய்திக்குரிய செய்தியில்,எந்தளவுக்கு உண்மை தன்மை உள்ளது என்பதை எஸ்.பி-யின் ஆய்வாளரான மணிவேல் அவர்களால், மதுக்கூர் காவல் SBHC- செந்தில்குமாரின் மீது எடுக்கும் நடவடிக்கை பொறுத்தே அமையும் என்று தெரியவருகிறது.

மேலும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மிக நேர்மையானவர் என்பதை நாம் ஏற்கனவே அறிந்ததால், நம்மால் அனுப்பப்பட்ட அனைத்து புகார்கள் மற்றும் ஆதாரங்கள் அனைத்தும் எஸ்.பி.கவனத்திற்கு செல்லாமல் இருக்கிறதோ என்ற நினைப்பில், நேற்று 21-06-2022- அன்று, காலை,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கவனத்திற்கு கொண்டு செல்ல எஸ்.பி.யின், கைபேசியின் எண்ணுக்கு, நமது மூத்த பத்திரிகையாளரால் தொடர்பு கொள்ளப்பட்டு மகேந்திரனின் பற்றி விவரத்தை கூறியவுடன், உடனே நீங்கள் அளித்த புகார்கள் அத்தனையும், எனது (அவரது) வாட்ஸ் ஆ:ப்-க்கு அனுப்பிவைக்க எஸ்.பி. அவர்கள் கோரியதும், அடுத்த கணமே அனைத்து செய்திகளும் மதிப்பிற்குரிய காவல்கண்காணிப்பாளர் திருமதி ரவளிப்பிரியா IPS அவர்களது கவனத்திற்கு நம்மால் அனுப்பியும் வைக்கபட்டது.

உடனே நேற்று மாலையிலே 21-06-2022-ல், தனிப்படை போலிஸார்களின் அதிரடி ரெய்டுகளால் மகேந்திரனின் வட்டாகுடி கிராமத்தில் அவன் கைது செய்யப்பட்டு, இருசக்கர வாகனத்தில் இரண்டு போலிசாருக்கு இடையில் மகேந்திரன் உட்காரவைக்கப்பட்டு மதுக்கூர் காவல் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு, மகேந்திரன் ( வயது,42) த/பெ.பிரபலனாதன் குற்ற எண் 281/2022 , 5, 7( 1 ) லாட்டரி சட்டம் 5,7 (3) லாட்டரி சட்டப்படி வழக்கு பதியப்பட்டு இரவு பத்துமணிக்கு மேல்வரை மகேந்திரன் காவல் நிலைய லாக்கப்பில் ஜட்டியோடு அடைத்திருப்பதாக செய்திகள் நமக்கு வந்தது.

எனவே, இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் விஜிலென்ஸ் இயக்குனர் மற்றும் சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு நாம், பணிந்து தெரிவித்துக்கொள்வது....

மகேந்திரனின் கைது -யினை, விரும்பாத, அவளிடம் ஒசி சரக்கை வாங்கி குடிக்கும் வாட்டாகுடி கிராமத்தினர் சிலரும்,மற்றும் வாட்டாகுடியை சேர்ந்த சில பஞ்சாயத்தாரர்கள் பலரும், மதுக்கூர் காவல் நிலையத்திற்கு கூட்டமாக வந்து மகேந்திரனை விடுவிக்க மதுக்கூர் காவலிடம் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர்.

மகேந்திரனுக்காக வந்த வாட்டாகுடி கிராமத்தினர் சிலர் ,மகேந்திரனின் குற்றத்தை மறைக்கவும் மற்றும் காவலர்களின் ஊழலுக்கு துணை போனவர்கள் என்பதால், அதாவது தடை செய்யப்பட்ட லாட்டரி சட்டத்தின் படி 5,7 (3)-ன் படி லாட்டரியின் முகவராகவோ, அல்லது வர்த்தகராக, விளம்பரதாராக, வினியோகிப்பராக அல்லது அந்த சீட்டினை வாங்கியவராக இருந்தாலும் கூட அவர்களுக்கும் கடுமையான இரண்டு வருட சிறை தண்டனையும், அல்லது அபராதம் இரண்டும் சேர்த்து நீட்டிக்க கூடிய ஒரு காலம் என்பது உள்ளதால், குற்றவாளியான மகேந்திரனின் விடுவிப்புக்கு வந்தவர்கள் எல்லாம் குற்றவாளியின் வாடிக்கையாளர்கள் (அதாவது லாட்டரி சீட்டினை வாங்கியவர்கள்) என்பதால் காவல் நிலையத்தின் CCTV காட்சிகளை ஆய்வு செய்து ,மகேந்திரனின் விடுவிப்பு சம்பவமாக மதுக்கூர் காவல் நிலையம் வந்து பஞ்சாயத்து பேசிய அனைவரும் மகேந்திரன் என்ற குற்றவாளிக்கு உறுதுணையாக இருந்ததற்கும், மற்றும் அவரது வாடிக்கையாளராக அதாவது லாட்டரி சீட்டினை வாங்கியவராக,

இருந்ததற்குரிய ஆதாரம் என்பதால் 5,7 (3) என்ற சட்டத்தின் கீழ் மகேந்திரனுக்காக காவல் நிலையம் வந்த சென்றவர்கள், மற்றும் இது சம்பந்தமாக காவல் நிலைய அதிகாரிகளுடன் தொலைதொடர்புகளில் ஈடுபட்டவர்கள் என வாட்டாகுடியில் இருந்து நேற்று மதுக்கூர் காவல் நிலையத்திற்கு வந்தவர்கள் மீதும், உரிய வழக்கு பதிந்து சிறையில் அடைப்பதற்கான நடவடிக்கை எடுக்க பணிந்து கோருகிறேன்.

மேலும், குற்றவாளி-யான மகேந்திரனிடம் லாட்டரி சீட்டினையும், கலப்பட மதுபாட்டில்களையும் பெற்றவர்கள் என்ற முறையில்தான், அதாவது மகேந்திரனின் வாடிக்கையாளர்களான இவர்கள் மகேந்திரனுக்காக, மதுக்கூர் காவல் நிலையம் வந்த சென்றுள்ளனர் என்பதால்,அவர்கள் அனைவர் மீதும் லாட்டரி சட்டம் 5,7 (3)-ன் படி வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க பணிந்து கோருகிறேன்.

அதே போல், மகேந்திரன் குற்றவாளி என்கிற போது, ஒரு குற்றவாளியின் விடுவிப்புக்காக வந்த இவர்கள், பஞ்சாயத்து பேசியதின் நோக்கம் என்ன? அந்த குற்றவாளியின் வாடிக்கையாளர்கள்தான் இவர்கள் என்பதால் மட்டும்தான் மகேந்திரனின் விடுவிப்புக்காக மதுக்கூர் காவல் நிலையம் வந்து சென்றுள்ளனர் என்பதற்கு ஆதாரமாக அமைகிறது. மேலும், மகேந்திரன் தேவர் சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதால், மகேந்திரனின் விடுவிப்புக்காக வந்தவர்கள் அவனை ரத்த உறவு என்றும் சொல்வதற்கில்லை, ஏனெனில் மகேந்திரனின் விடுவிப்புக்காக மதுக்கூர் காவல் நிலையம் வந்து சென்றவர்கள் பெரும்பாலும் வேளாளர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்பதால் இவர்கள் குற்றவாளியின் விடுவிப்புக்காக எடுத்த அக்கரைகளே, மகேந்திரனின் வாடிக்கையாளர்கள் என்பதற்கான ஆதாரமாக அமைகிறது .

மேலும், நேர்மையான, நியாயாமான, ஒழுக்கம் உள்ள, எந்த ஒரு நபரும், ஒரு சமூக விரோத குற்றங்களை செய்தும், தரங்கெட்ட பேச்சுக்களை பேசி வரும் ஒரு குற்றவாளிக்கு துணையாகவோ, அவரது தவறுகளை நியாயப்படுத்துபவர்களாகவோ உறுதியாக இருக்கப்போவதில்லை. அப்படியிருக்கிறபட்சத்தில் குற்றவாளியான மிகவும் கெடுகெட்ட மகேந்திரனுக்கு பின்னால், வாட்டாகுடி வடக்கில் உள்ள சிலரும், பல பஞ்சாயத்தாரர்களும் சென்றிருக்கிறார்கள் என்றால், அவர்களை எல்லாம் என்ன சொல்வது? இந்த ஊரில் உள்ள பலரது நிலைகள் இப்படி தரங்கெட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நாம் சொல்வதில் என்ன தவறு உள்ளது?

மேலும்,கடந்த சில வருடங்களுக்கு முன்பு இதே மதுக்கூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்த பெண் ஆய்வாளர் ஒருவர், முக்கூட்டுச்சாலையில் சீருடையோடு பணிபுரிந்த கொண்டிருந்த நிலையில், வாட்டாகுடி கிராமத்தை சேர்ந்த சிலரால் தாக்கப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்டார். அந்த பெண் ஆய்வாளரின் மேல்சட்டை பாக்கெட்கள் கிழித்தெடுக்கப்பட்டும் அவரும் அசிங்கப்படுத்தப்பட்டார். அப்படிப்பட்ட கீழ்தரமான செய்கைகளை செய்த அதே நபர்கள் தான், நேற்று மகேந்திரனின் விடுவிப்புக்காக மதுக்கூர் காவல் நிலையத்திற்கும் கூட்டமாக வந்து பஞ்சாயத்து பேசியவர்கள் என்பதையும் நாம் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு நினைவுபடுத்திக்கொள்வதோடு இந்த வாட்டாகுடி ஊரில் உள்ள சிலரது இழிவான செயல்கள் மற்றும் மிக கேவலமான, தரமற்ற செயலுக்கு இதையே முன்னூதரணமாக கூறி வாட்டாகுடியின் ஊரில் உள்ள சிலரது நிலைப்படுகளின் செயல்கள் இப்படித்தான் இருக்கும் என்பதற்கும் இதனையே உதாரணமாக பதிவிட்டுக்கொள்கிறேன்..

இப்படியொரு நிலையில் சில குறிப்பிட்ட வாட்டாகுடி மக்கள் மட்டும்தான் அதாவது , குற்றவாளி மகேந்திரனோடு தொடர்பில் உள்ள வாடிக்கையாளர்கள் மட்டுமே மதுக்கூர்

காவல் நிலையத்திற்கு வந்து மகேந்திரனின் விடுவிப்புக்கு பஞ்சாயத்து பேசிவிட்டு சென்றுள்ளனர் .

எனவே மதுக்கூர் காவல் நிலையம் வந்து, குற்றவாளிக்காக பரிந்து பேசிய அந்த வாட்டாகுடி மக்களில் பலர் காவல் உதவி ஆய்வாளரையே அடித்து உதைத்து பதம் பார்த்தவர்கள் என்பதாலும், மகேந்திரனிடம், லாட்டரி சீட்டினை பெற்றவர்கள் என்பதால் மட்டும்தான் மகேந்திரனின் விடுவிப்புக்கு மதுக்கூர் காவல் நிலையம் வந்துள்ளனர் . எனவே, மகேந்திரனின் விடுவிப்புக்காக மதுக்கூர் காவல் நிலையம் வந்த வாட்டாகுடி வாடிக்கையாளர்கள் மீது 5,7 (3)-ன் படி வழக்கு பதிந்து உரிய நடவடிக்கை எடுக்க பணிந்து கோருகிறேன்.

மேலும், மகேந்திரன் மீது லாட்டரி சீட்டு வழக்கு மட்டும் தான் பதியப்பட்டிருக்கிறதே தவிர, கலப்படமது விற்பனைக்கான வழக்குகளை போலிசார் பதியாத காரணத்தால், அதற்கான வழக்குகளையும் மகேந்திரன் மீது பதிந்தும் உரிய நடவடிக்கை எடுக்க பணிந்து கோருகிறேன்.

மேலும், மகேந்திரனின் லாட்டரி விற்பனை மற்றும் மது கலப்பட விற்பனையில் இந்த கிராமத்தினர் சிலர் ஒரு வாடிக்கையாளராக இருப்பதால் தான், மகேந்திரன் என்ற குற்றவாளி நடத்தி வரும் சமூக விரோத இந்த திருட்டு தொழிலுக்கு வாடிக்கையாளரான வாட்டாகுடி வடக்கு கிராமத்தினரும் சிலரும், இவன் கைது என்றதும், இவனது விடுவிப்புக்காக மதுக்கூர் காவல் நிலையம் வந்து பஞ்சாயத்து பேசிவிட்டு சென்றுள்ளனர். எனவே லாட்டரி சட்டம் 5, 7, (3)-ன் படி மகேந்திரனுக்காக மதுக்கூர் காவல் நிலையம் வந்த வாட்டாகுடி கிராமத்தினர் யார் யாரென்று அடையாளம் கண்டு CCTV காமிரா காட்சிகளை கைப்பற்றி மகேந்திரனின் விடுவிப்பிற்காக வந்த வாட்டாகுடியினர் யார் என்பதை அறிந்து அவர்கள் மீதும் உரிய வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க கோருகிறேன்.

மேலும்,நமது "அரசியல் ஒற்றன்" என்ற பத்திரிகையில் மகேந்திரன் பற்றிய செய்தி வந்தவுடன் நமது மூத்த பத்திரிகையாளரை தொடர்பு கொண்ட மகேந்திரன், அச்சு பதிவில் ஏற்ற முடியாத மிகவும் கேவலமான, கீழ்தரமான பேச்சுக்களை பேசியதோடு "தான்" இப்பவும் கள்ள லாட்டரி, மதுபாட்டில்களை அதிகமாய் விற்பதாக தெனாவெட்டாக பேசிய மகேந்திரன் , "தான்" செய்துவரும் சமூக விரோத தொழில்களை ஒத்துக்கொண்டு, அதற்கான அறிவிப்புகளையும் மகேந்திரன் மூலமாகவே பகிரங்கப்படுத்தப்பட்டது. (கேட்க. ஆதாரம். இணைப்பில்)

எனவே, அந்த ஆடியோவையும் ஆதாரமாக வைத்து, நமது மூத்த பத்திரிகையாளரால் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு புகார் அளித்த பின்பும், உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்தது ஒரு புறம் இருந்தாலும், தற்போது உரிய நடவடிக்கைக்கு எஸ்.பி. அவர்களால் உத்திரவிட்டபிறகும் கூட ,மதுக்கூர் போலீசாராலும் மகேந்திரன் மீது லாட்டரி வழக்கை மட்டும் பதிவு செய்துவிட்டு, கலப்படமது விற்பனை வழக்கை பதிவு செய்யாமல் விட்டிருப்பது, மகேந்திரனிடம் வாங்குகின்ற லஞ்சத்திற்காக மதுக்கூர் காவல் அதிகாரிகள் விசுவாசத்தையே காட்டி வருவதை அப்பட்டமாக நிருபிக்கப்படுவதால் மகேந்திரன் மீது கலப்படமது விற்பனைக்கான வழக்குகளையும் பதிய பணிந்து கோருகிறேன்.

மேலும்,மதுக்கூர் மற்றும் கலால் போலிசாரும் மகேந்திரனிடம் இருந்த வாரம், வாரம், மிகப்பெரிய மொத்தமான லஞ்ச வருமானத்தையும், மற்றும் அன்றாட நாட்களில் சில

சில "கொசுறு "வருமானத்தை லஞ்சமாகவும், மற்றும் ஒசி-யில் சரக்கு பாட்டில்களையும் வாங்கிகொண்டு போலிசார் சென்றுள்ளனர் என்ற குற்றங்கள் என்னால் ஏற்கனவே புகாராக பதிவு செய்யப்பட்டிருப்பதால், அதனை நீருபிக்கிற வகையில், மகேந்திரன் மீது தற்போது மதுவிற்பனை வழக்குகளை பதியாமல் கணக்கு காட்டிய மதுக்கூர் போலிசாரால், லாட்டரி விற்பனை வழக்கை மட்டும் மகேந்திரன் மீது பதிவு செய்து விட்டு, கலப்படமது விற்பனைக்குரிய வழக்கை பதியாமல் மகேந்திரனை சிறைக்குள் அனுப்பியுள்ளது போலீஸ்.

எனவே மகேந்திரன் மீது கலப்பட மது விற்பனை வழக்கையும் பதிவு செய்ய கோருவதோடு, அதனை கணக்கு காட்டாமல், லாட்டரி விற்பனை மட்டுமே FIR - ல் பதிவு செய்து, கலப்பட மதுவிற்பனையை மறைத்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள் மீது உரிய விசாரணை செய்து துறைரீதியான மற்றும் தண்டனைகளை வழங்க, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஊழல் தடுப்பு துறை இயக்குனர் அவர்களுக்கும் எம்மால் பணிந்து கோரப்படுகிறது.

மேலும், மதுக்கூர் காவலில் உள்ள SBHC செந்தில்குமார் மீது இதுவரை நமது மூத்த பத்திரிகையாளரால் குற்றஞ்சாட்டப்பட்ட புகார் குறித்த நடவடிக்கைகளும் எதுவும் விசாரிக்கபடவும் இல்லை என்பதும், மதுக்கூர் காவல் SBHC செந்தில்குமார் மூலமாகத்தான் மதுக்கூர் பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் எல்லாம் தடைசெய்யப்பட்ட கள்ள லாட்டரி, மற்றும் கலப்படமது விற்பனைகளும் கனஜோராக நடைபெறுகிறது என்றும் தெரியவருகிறது.

மேலும், நமது மூத்த பத்திரிகையாளரால் குறிப்பிட்ட குற்றத்திற்கு ஆதாராமாகத்தான், மகேந்திரன் மீது நேற்று (21-06-2022) பதிவு செய்யப்பட்ட வழக்கில் கூட மகேந்திரன் மீது கலப்படமது விற்பனைக்கான குற்றத்தை சேர்க்கப்படவில்லை என்பதையும் நினைவு படுத்திக்கொள்வதோடு, மதுக்கூர் அருகில் உள்ள புலவஞ்சி கிராமத்தில் உள்ள பெட்டிக் கடையில் மதுபாட்டில் விற்பனை கனஜோராக நடந்துவந்த காட்சி வீடியோவையும் இத்துடன் ஆதாரமாக சமர்பிக்கிறேன். (ஆதாரம் :பார்க்க. காட்சி வீடியோ மற்றும் மகேந்திரன் மீது மதுக்கூர் போலிசாரால் பதியப்பட்ட லாட்டரி வழக்கு மட்டும் குற்ற எண் 281/2022 விபரம்.).

ஆனால்,மகேந்திரனால் விற்கப்பட்ட கலப்பட மது விற்பனைக்கு தற்போதும் வழக்குகள் பதியப்படவில்லை. இதுவும் மதுக்கூர் காவல்,SBHC செந்தில்குமாரின் கைங்கர்யம்தான் என்கின்றனர். மேலும், எஸ்.பி.- யின் கவனத்திற்கும் இந்த மதுக்கூர் காவல் SBHC செந்தில்குமாரின் தகவல்கள் எல்லாம் தவறான தகவல்களாகவே கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அது மட்டுமல்லாது, SP-க்கு தமிழ் சரிவர படித்து புரிய முடியாத மற்றும் தெரியாத காரணத்தினால், அவரது கவனத்திற்கு பெரும்பாலான செய்திகள் அனைத்தும், உரிய அதிகாரிகளால் மறைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டு வருகிறது. எனவே மாவட்ட SP அவர்கள் இதனை உரிய ஆய்வு செய்து ஒட்டுமொத்த கறுப்பாடுகளையும் கூண்டோடு தண்டனை பணியிடமாக மாற்றப்பட்டு, உரிய தண்டனைகளை வழங்கவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், மாவட்ட காவல் அலுவலகத்தில், மதுக்கூர் சரக காவலராக பணிபுரியும் SBHC- செந்தில்குமார் மூலமாக பெறப்படும் மொத்த சமூக விரோத தொழில்களில் இருந்து வரும் லஞ்ச லாவண்யங்கள் அனைத்தையும் கணக்கீடு செய்தும், தஞ்சாவூர்

மாவட்டங்களில் நடக்கும் சமூக விரோத தொழில்கள் அனைத்தையும் அறிந்து, அதனை ஆய்வு செய்யவும் அதிரடியான மதிப்பிற்குரிய காவல் கண்காணிப்பாளரான திருமதி. ரவளிப்பிரியா IPS மற்றும் தஞ்சை மாவட்ட ஆட்சியர், ஊழல் ஒழிப்பு துறையின் இயக்குனர் அவர்களுக்கும் உரிய நடவடிக்கைக்கு என்னால் பணிந்து கோரப்படுகிறது.

குறிப்பு:

மகேந்திரனின் கலப்பட மது- மதுக்கூர் டாஸ்மாக் - கில் இருந்து மொத்தமாக வாங்கப்பட்டு வந்தாலும்,அந்த பாட்டில் உள்ள சரக்கை மருத்துவதுறையின் மிகப்பெரிய ஊசி மூலமாகவும், மிக சூதனமாக மற்றும் நூதனமான முறையில் பாட்டிலின் மூடியை கழட்டியும், அந்த சரக்குகள் பாட்டிலில் இருந்து பெருமளவு வெளியேற்றப்பட்டு, கஞ்சா, மற்றும் போதை மாத்திரைகள், மற்றும் மருத்துவத்தில் மிகப்பெரிய அறுவை சிகிச்சையை மேற்கொண்ட நேரத்தில் எடுத்துக்கொள்ளும் மருத்துவ மருந்துகளையும், சரக்கு பாட்டிலில் கலந்து மகேந்திரன் மற்றும் அவனது கூட்டணியினரால் விற்கப்பட்டு வருவதால், மகேந்திரனின் விற்பனையின் "சரக்குகள் " வீரியம் அதிமாக இருப்பதும், அதனால் இவனது விற்பனை அதிகரித்து வருவதையும் குறிப்பிட்டு அந்தப் பகுதி மக்கள் பலரும் பல வகையில் பேசிகொள்கிறார்கள்.

மேலும், இவனது கலப்பட விற்பனையின் சரக்குகளது எண்ணிக்கைகள் அதிகரித்து வருவதால், மதுக்கூர், பட்டுக்கோட்டை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள டாஸ்மாக் விற்பனைகளும் குறைந்து, அரசுக்கு உரியவருமானங்களிலும், தடைகளை ஏற்படுத்தி வருகிறான் மகேந்திரன். எனவே இந்த "சரக்கின் சூழல்" குறித்து, நாம் மருத்துவர்களிடம் விசாரித்த போது, அளவுக்கு அதிகமானால் எதுவும் நஞ்சுதான் என்றும், "திடம்" தெரியாமல், கலப்படங்கள் அதிகமாகும்பட்சத்தில் அது உயிரையும் கொல்லும் என்றும் கூறினார்கள்.

மகேந்திரனால் கலப்படமது விற்பனை என்பது நூறு சதவீதம் உண்மை என்பதை அந்த கிராம மக்களாலும், சுற்றப்புற கிராம மக்கள் எவராலும் மறுக்க மற்றும் மறைக்க முடியாத உண்மை. ஏன் அவனே நம்மிடம், அவன் பேசிய மிரடட்டலின் ஆடியோவில், அவனே தனது குரல் மூலம் வாக்குமூலம் அளித்துள்ளான்(கேட்க...மகேந்திரன் பேசிய ஆடியோ - ஆதாரம்).

எனவே மிகப்பெரிய "விஷ"சாவுகள் ஏற்படாத வண்ணமாக மகேந்திரனின் தொடர் நடவடிக்கைகளை உற்று நோக்கி, அவனை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழும், அதிக போதைவஸ்துகளான போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா போன்றவைகளை பயன் படுத்தி வருதாகவும் அறிய வருவதால், மகேந்திரன் மீது கஞ்சா வழக்குகளையும் பதிவு செய்து சிறையில் அடைத்து, அப்பகுதியின் பொதுமக்களின் உயிரை காக்கவும் நம்மால் பணிந்து கோரப்படுகிறது.

எனவே இவனது கலப்பட மதுவின் உண்மை தன்மையை ஆய்வு செய்ய, அந்த பாட்டில்களை கைப்பற்றி அதனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதோடு, அந்த கலப்படமது விற்பனைகளையும் தடை செய்து, மகேந்திரன் மீது தற்போது பதிவு செய்யப்பட்ட லாட்டரி, வழக்கோடு, கலப்பட மதுவிற்பனை வழக்கினையும் பதிந்து உரிய நடவடிக்கை எடுக்க பணிந்து கோருகிறேன்.

மேலும், இப்படி கலப்பட மதுவிற்காக, அதிக போதை தரும் வஸ்துகளை மொத்தமாக வாங்கி வரும் மகேந்திரனால், அதனை கலப்பட மதுவிற்கு உபயோகித்து வரும்

நிலையில், இவர்களால் ஏன் கஞ்சா மற்றும் அதிக போதை தரும் வஸ்துகளை அந்த பகுதிகளிலோ அல்லது மற்றொரு பகுதியில் உள்ள வாடிக்கையாளர்களுக்கோ மகேந்திரனால் தனிப்பட்ட முறையில் சில்லறை விற்பனைகளை செய்யவும் வாய்ப்புகள் இருப்பதாலும், இதனை இவர்கள் எப்படி விற்பனை செய்யாமல் இருப்பார்கள் என்பதையும், கேள்விகளாக எழுப்பி, தனிப்படை போலிசாரால் ரகசிய விசாரணைகள் மேற்கொண்டால், கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதைகளாக கூட முடியலாம் என்றே இப் பகுதி மக்கள்களிடத்தில் இருந்தும் செய்திகளும் கசிந்து வருகிறது.

எனவே மாவட்ட காவலின் அதிரடி படைகளை சேர்ந்தவர்களும், போதை தடுப்பு போலீஸ் அதிகாரிகளும் (NARCOTICS) இவன் மீது எப்போதும் கண்விழித்து பார்வைகளை வீசிக் கொண்டே இருந்தாலே, பல்வேறு கிராமங்களிலும், நகரங்களும் உள்ள பொதுமக்கள் கூட, மகேந்திரனின் "விஷம" பிடியில் இருந்து ஓரளவு தப்பிப்பதற்கான வாய்ப்புகள் வந்துசேரும் என்பதே உண்மையாகும்.

எனவே காவல் அதிகாரிகளின் உரிய அதிரடிகள் எப்போதும், மகேந்திரன் மீது தொடர்ந்த நிலையிலேயே செயல்பட்ட படி இருந்தால் மட்டும் தான், அவனால் இந்த குற்ற தொழில்களுக்கான முடிவுகள் எட்டப்படும். இல்லையேல் அவன் மீது கஞ்சா வழக்குகளோ அல்லது குறைந்த பட்சமாக குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறபட்சத்தில் மட்டுமே, டெல்டா பகுதி மக்களின் உயிரை பாதுகாக்க முடியும் என்பதால், உரிய நடவடிக்கைக்காக பணிந்து கோருகிறேன்.

**பணிவுடன்,**



நெல்லை கோபால்,
மூத்த பத்திரிகையாளர்
9994478389/22 - 06-2022.